CoverageReport: TCS IT Wiz – Coimbatore Edition

**Publication:** MakkalKural
**Date:** 19/08/2014
**Edition:** Coimbatore
**Page No:**6
**Headline:**Covai edition of TCS IT Wiz 2014

# "டிசிஎஸ் ஐடி விஸ்–2014" போட்டிகள்

கோவை, ஆக. 19–

கோவையில் டாடா கன்சல்டன்சி சர்வீஸ் சார்பில், "டிசிஎஸ் ஐடி விஸ்–2014" போட்டிகள் நடைபெற உள்ளது.

டாடா கன்சல்டன்சி சர்வீஸ் நடத்தும் "டிசிஎஸ் ஐடி விஸ்–2014" வரும் 26ம் தேதி ஆர்.எஸ்.புரம் கார்பரேஷன் கலை அரங்கத்தில் நடக்க உள்ளது.

தொழில் நுட்ப சூழ்நிலை, வர்த்தகம், மக்கள், புதிய போக்குகள் மற்றும் ஜாம்பவான்கள் உட்பட பல்வேறு அம்சங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப செயல்கள் ஆகியவற்றின் மீது புதிர்போட்டிகள் நடைபெறும். இதில் 8 முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள், ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் 10 பேர் வரை பங்கேற்கலாம். ஒரு குழுவிற்கு இருவர் வீதம் கலந்து கொள்ளாலம்.

எழுத்து தேர்வுக்கு பின் தேர்ந்தெடுக்கப்படும் முதல் ஆறு அணிகள், பிராந்திய இறுதிபோட்டிக்கு தகுதி பெறுவர். பிராந்திய இறுதி போட்டியில் வெற்றி பெறும் குழு வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள பிரதான இறுதி சுற்றில், ஐக்கிய அரபு எமிரெட்ஸ் அணியுடன் மோத உள்ளனர். பிராந்திய சாம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு ஐபேட் ஏர் மற்றும் இரண்டாம் இடம் பெறுபவர்களுக்கு ஐபேட் மினியும் வழங்கப்படும்.

போட்டியில் பங்கெடுப்பவர்களின் விவரங்களை ஆகஸ்ட் 24ந் தேதிக்கு முன்பாக, டாடா கன்சல்டன்சி சர்வீசஸ், எச்டிஎப்சி ஹவுஸ், 29/4 அன்ட் 29/5, காமராஜ் சாலை கோவை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். ஆன் லைனில் பதிவு செய்ய www.tcsitwiz.com என்ற முகவரியை பயன்படுத்திக் கொள்ளவும்

CoverageReport: TCS IT Wiz – Coimbatore Edition

**Publication:** MakkalKural
**Date:** 29/08/2014
**Edition:** Coimbatore
**Page No:**6
**Headline:**Kothagiri St Judes Public School wins TCS IT Wiz

# டி.சி.எஸ்., நிறுவனத்தின் ஐ.டி., புதிர் போட்டியில் செண்ட் ஜூடஸ் பப்ளிக் பள்ளி சேம்பியன்ஷிப்

கோவை, ஆக. 28–

டி.சி.எஸ்., நிறுவனத்தின் சார்பில் நடைபெற்ற ஐ.டி., புதிர் போட்டியில், கோத்தகிரியை சேர்ந்த செண்ட் ஜூடஸ் பப்ளிக் பள்ளி வெற்றி பெற்றது.

டி.சி.எஸ்., நிறுவனம் ஆண்டு தோறும் ஐ.டி., புதிர்போட்டியினை நாடுமுழுவதும் பள்ளிகளுக்கிடையே நடத்தி வருகிறது. நடப்பாண்டிற்கான போட்டி துவங்கிய நிலையில், கோவை, ஈரோடு, திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்டத்திற்கு உட்பட்ட பள்ளிகளுக்கிடையேயான போட்டி ஆர்.எஸ்.புரம் கலையரங்கில் நடந்தது. இதில் 72 பள்ளிகளைச் சேர்ந்த எட்டு முதல் பிளஸ் 2 வரையிலான மாணவர்கள் பங்கேற்றனர்.



இந்தியாவின் பிரபல குவிஸ் மாஸ்டர் கிரி போட்டியை தொகுத்து வழங்கினார். எழுத்துப்பூர்வமான ஆரம்ப சுற்றில் பங்கேற்ற 479 அணிகளில், ஆறு அணிகள் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியது. தொடர்ந்து நடந்த பிராந்திய இறுதிப்போட்டியில், கோத்தகிரி, செண்ட் ஜூடஸ் பப்ளிக் பள்ளி மாணவர்களான ஆசிக் ரேஜி, அஸ்வின் பிலிப் ஆகியோர் சேம்பியன்ஷிப் பெற்று அசத்தினர். இரண்டாமிடத்தை கோவை, பாப்பநாயக்கன்பாளையம் ஜி.கே.டி. மெட்ரிக் பள்ளி மாணவர்களான சரத் சந்தர், ஹரி கிருஷ்ணன் ஆகியோர் தட்டிச் சென்றனர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சென்னை, டி.சி. எஸ்., வளர்ச்சி சந்தை பிரிவு தலைவர் விஸ்வநாதன் பரிசுகள் வழங்கினார். சேம்பியன்ஷிப் பெற்ற கோத்தகிரி மாணவர்கள் வரும் டிசம்பர் மாதம் மும்பையில் நடக்கும் இறுதிப்போட்டியில், 14 அணிகளுடன் போட்டியிட உள்ளனர்.